உடுமலைப்பேட்டை நகராட்சி

**16/02/2023 ம் தேதிய சாதாரணக்கூட்ட மன்ற நிரல்**

| வ.எண் | நகர் மன்றத் தீர்மான எண் | Subjects in Agenda | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| 1 | 682 | உடுமலைப்பேட்டை பழனிரோடு, இராஜேந்திரா ரோடு நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் கோரியுள்ள கருத்துருவின் அடிப்படையில் **"ஒருங்கிணைந்த தலைவர்கள் பூங்கா"** (UNITED LEADERS PARK) அமைத்திட **நகரமன்ற உறுப்பினர்களால்** கொண்டு வரப்படும் சிறப்பு தீர்மானம், | ஒரு மனதாக அங்கீகரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது. |
| 2. | 683 | உடுமலைப்பேட்டை பகுதிக்குட்பட்ட ஐஸ்வர்யா நகரில் பூங்காவுக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தை இந்திய மருத்துவ சங்கத்தினர் ஆக்கிரமித்து நகர் மன்ற அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி உள்ளனர். மேற்படி பூங்காவிற்கான இடத்தை மீட்கவும், இந்திய மருத்துவ சங்கத்தினர் சார்பாக வழங்கிய மாற்று இடத்தை ரத்து செய்து பூங்கா இடத்தை மீட்கவும், அதற்கான நடவடிக்கை எடுக்கவும் இம்மன்றம் தீர்மானிக்கிறது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுகிறது. |
| 3 | 684 | கடந்த 18.03.2023 அன்று மாண்புமிகு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டத்தில் புகைவண்டி நிலையம் முதல் தளிரோடு மேம்பாலம் வரை செல்லும் கபூர் கான் வீதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், கபூர் கான் வீதி தளிரோடு மேம்பாலத்தை இணைக்க ஒரு இணைப்பு பாலம் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அந்த இணைப்பு பாலம் மாநில நெடுஞ்சாலை துறையின் கீழ் வருவதால் மேற்படி நெடுஞ்சாலைத் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள கோரி இம்மன்றம் தீர்மானிக்கிறது. | உரிய நெடுஞ்சாலைத் துறையினருக்கு நடவடிக்கை மேற்கொள்ள ம்மன்றம் அனுமதி வழங்கப் பட்டது. |
| 4 | 685 | மாநில நெடுஞ்சாலையான கொழுமம் ரோட்டில் அமைந்துள்ள ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பொதுமக்கள் தடையின்றி செல்ல கொழுமம் ரயில்வே கேட் பகுதிக்கு ஒரு மேம்பாலம் அமைக்கவும். இந்திய ரயில்வே துறை மூலம் அவர்களது பகுதியில் பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள கோரியும், இம்மன்றம் தீர்மானிக்கிறது. | அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 686 | தளிரோட்டை அகலப்படுத்தவும் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், பொள்ளாச்சி ரோட்டில் காமராஜர் சிலையில் இருந்து மாரியம்மன் கோயில் வரை உள்ள சாலையின் இருபக்கமும் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் சம்மந்தப்பட்ட துறைகள் நடவடிக்கை மேற்கொள்ள இம்மன்றம் தீர்மானிக்கிறது. | அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. |

(ஒப்பம்) மு. மத்தீன்,
நகரமன்றத்தலைவர்

ஆணையாளர்,
உடுமலைப்பேட்டை நகராட்சி